




மதுரை வடக்கு மாவட்ட திமுக சார்பில் கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பிறந்த தினத்தை முன்னிட்டு மதுரை மேற்கு சட்டமன்ற தொகுதியைச் சேர்ந்த கிரிக்கெட் அணியினருக்கு கிரிக்கெட் விளையாட்டு உபகரணங்களை மாவட்ட செயலாளர், வணகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி வழங்கினார். இந்நிகவில் கழக நிர்வாகிகள் எம்.ஆர்.எம். பாலசுப்பிரமணியன், தனச்செல்வம், வழக்கறிஞர் பாலாஜி, ஜி.பி. ராஜா, கணேசன், ஜெயக்குமார், பரவை மனோகரன், சிறைச்செல்வன், ஆர்.கே.ஜெயராமன், திருக்குமரன் . ராசாமணி, என்.எஸ்.மணி, சசிகுமார், சுதன், மதி வெங்கடேஷ், காவேரி, மதன்செல்வம், சசிதேவா, பரவை அன்புச்செல்வன், ஐயப்பன், பாலசுப்பிரமணியம், துரை சரவணன், ஜே. கருப்பு, ஜே.மரியா, போதராஜ், திருப்பதி, தங்கராஜ், மாமன்ற உறுப்பினர் அமுதா முத்துப்பேர்க்கினியன் உள்ளிட்ட திரளானோர் மற்றும் 131 கிரிக்கெட் அணிகளைச் சேர்ந்த 1441 கிரிக்கெட் வீரர்கள் பங்கேற்றனர்.

### திருப்பத்தூர் தொகுதியில்

# ரூ. 1.59 லட்சம் மதிப்பிலான 4 கலையரங்கங்கள்!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் திறந்து வைத்தார்!

சிவகங்க,. மார்ச் 14 -

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட குன்றக்குடி அருகில் உள்ள நேமம் முத்துப்பட்டணம் சூரக்குடி ஊராட்சி தேவரிப்பட்டி நெற்குப்பைபேரூராட்சி பிடாரி அம்மன் கோயில் ஆகிய ஊர்களில் அப்பகுதிமக்கள் தங்களது ஊருக்கு கலையரங்கம் வேண்டும் என்று கோரிக்கை கூ வைத்தார்கள். கிராம மக்களின் கோரிக்கையை ஏற்று சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து ரூபாய் ஒரு லட்சத்து 59.50 ஆயிரம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட 4கலையரங்க ங்கள் திறப்பு விழா மாவட்ட திட்ட இயக்குனர் மருத்துவர் அரவிந்த் தலைமையில் நடைபெற்றது. கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் நான்கு கலையரங்கங்களை திறந்து வைத்து சிறப்புரை ஆற்றிய தாவது. தமிழக முதல்வர் தளபதி அவர்கள் நல்லாட்சியில் கிராமங்களில் அடிப்படை திட்டங்கள் நிறைவே ற்றப்பட்டு வருகின்றது.

சிவகங்கை மாவட்டம் கடந்த ஐந்து ஆண்டுகளில் பல்வேறு வளர்ச்சிகளை பெற்றுள்ளது. மக்களின் அடிப்படை தேவை கள் நிறைவேற்றப்பட்டுள்ளது. இன்னும் என்னென்ன தேவைகள் என்று மக்கள் கோரிக்கை வைத்தால் அந்த கோரிக்கைகள் அரசினால் நிறைவேற்ற நிறைவேற்றப்படும் . உங்கள் ஆதரவுடன் நான்காவது முறையாக சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு மக்களின் கோரிக்கைகளை படிப்படியாக நிறைவேற்றி வருகிறேன். மக்களின் தேவைகள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகின்றது .தங்களது தேவைகளை என்னிடம் தெரி வித்தால் படிப்படியாக நான் அவைகளை நிறைவேற்றுவேன் என்று உறுதி கூறுகிறேன் . நடைபெற உள்ள சட்டமன்ற தேர்தலில் தளபதி அவர்களின் நல்லாட்சி தொடர வேண்டும் . இரண்டாவது முறையாக முதல்வராக அமர வேண்டும். அப்பொழுதுதான் தமிழகம் வளர்ச்சி பெறும் .தமிழகத்தில் உள்ள கிராமங்கள் தன்னிறைவுபெறும்.குறிப்பாக பெண்கள் வளர்ச்சி அடைய முடியும் எனவே நடைபெற உள்ள தேர்தலில் தமிழக மக்கள் தொடர்ந்து முதல்வருக்கு ஆதரவு தரவேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன் இவ்வாறு அமைச்சர் கே. ஆர். பெரியகருப்பன் பேசினார் .

இந்த நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன்,ஒன்றிய செயலாளர்கள் குன்னக்குடி சுப்பிரமணியன்,கே.ஆர். ஆனந்த்,விராமதி மாணிக்கம், பொதுக்குழு உறுப்பினர் பள்ளத்தூர் கே. எஸ் .ரவி மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு தலைவர் கொத்தமங்கலம் சேது , மாவட்ட மகளிரணி தலைவர் மணிமேகலை முத்துச்சாமி, நெற்குப்பை பேராட்சி மன்ற துணைத் தலைவர் கண்ணன் மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி அமைப்பாளர் காளிமுத்து பிள்ளையார்பட்டி சதீஷ் சோமு ஒன்றிய துணைச் செயலாளர் முத்துக்குமார், ஒன்றிய ஆணையாளர்கள்மா. விஜயகுமார், திருமதி, குமுதம், நிர்வாகிகள் எஸ். ஆர்.பி.ரமேஷ் ,குமார் வட்டாட்சியர்கள் ராஜா, மாணிக்கவாசகம் உட்பட கிராம மக்கள் கலந்து கொண்டார்கள். அமைச்சர் சென்ற இடமெல்லாம் ஆரத்தி எடுத்தும்,குலவையிட் டும் பெண்கள் வரவேற்றார்கள் . கலையரங்கம் திறப்பு விழா வினை முன்னிட்டு அமைச்சர் சார்பில் அறுசுவை அசைவ விருந்து வழங்கப்பட்டது.




தேனி தெற்கு மாவட்டம் கம்பம் ஒன்றியம் புதுப்பட்டி பேரூர் திமுக சார்பாக ஆரம்ப சுகாதார நிலையத்தில் தனியார் நிறுவன SIGC பங்களிப்பு மூலம் அதன் நிர்வாக இயக்குனர் கே ஜி விநாயகமூர்த்தி ஏற்பாட்டில் அல்ட்ரா ஸ்கேன் அமைத்துக் கொடுத்து அதை தேனி தெற்கு மாவட்ட செயலாளர் கம்பம் ராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ. பொதுமக்கள் பயன்பாட்டுக்கு தொடங்கி வைத்தார். இந்த நிகழ்வில் SIGC நிறுவனத்தின் இயக்குனர்கள் வி டி எஸ் வாசகர் ஆர் டி அசோக்குமார் புதுப்பட்டி பேரூராட்சி மன்ற தலைவர் புதுப்பட்டி பேரூர் கழக செயலாளர் பார்த்திபன், புதுப்பட்டி பேரூராட்சி மன்ற செயல் அலுவலர்I மற்றும் மாவட்ட அயலக அணி அமைப்பாளர் ரவி, பாஸ்கரன் மாரி ராஜ் ஜெயபாண்டியன் ஈஸ்வரன் பிரதீபா பாரிசாம்பாள் முனியாண்டி ஆ ராசா சாமி கண்ணு சிவனேசன் உட்பட ஏராளமான கழக உடன்பிறப்புகளும் மகளிர் அணி சேர்ந்த நிர்வாகிகள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.



தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் ஊராட்சி ஒன்றியம், தத்தனேரி ஊராட்சி, ஊசிமேசியாபுரம் கிராமத்தில் ரூ25 லட்சம் மதிப்பீட்டில் சமூக நலக்கூடம் கட்டுவதற்கான பணியினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர், ஜீ.வி. மார்கண்டேயன் அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார். நிகழ்வில் விளாத்திகுளம் ஒன்றிய செயலாளர்கள் இம்மானுவேல், சின்னமாரிமுத்து, நவநீத கண்ணன், ராமசுப்பு, அன்புராஜன், உள்ளிட்ட கழக நிர்வாகிகள், கலந்து கொண்டனர்.

### சட்டப்பேரவை பொதுத்தேர்தல் – 2026

# ஓ.பன்னீர்செல்வம் - சட்டமன்றத் தொகுதி வாரியாக தேர்தல் பிரச்சாரச் சுற்றுப்பயணம்!



| தேதி | நேரம் | தொகுதி | ஒன்றிய/நகர/பேரூர் | இடம் |
|---|---|---|---|---|
| மார்ச் 13 | காலை 9.00 மணி | தென்காசி | ஆலங்குளம், கடையநல்லூர், தென்காசி ஆகிய ஒன்றியங்கள் இலஞ்சி, குற்றாலம், மேலகரம், சுந்தரபாண்டியபுரம் ஆகிய பேரூர்கள் | சாரதாம்பாள் திருமண மண்டபம், இலஞ்சி. |
| மார்ச் 13 | மாலை 4.00 மணி | கடையநல்லூர் | கடையநல்லூர் ஒன்றியம் மற்றும் நகரம் – அச்சன்புதூர், பண்பொழி பேரூர் | அச்சன்புதூர் |
| மார்ச் 13 | இரவு 7.00 மணி | சங்கரன்கோவில் (தனி) | குருவிக்குளம், சங்கரன்கோவில், மேலநீலிதநல்லூர் ஒன்றியங்கள் | சங்கரன்கோவில் |
| மார்ச் 14 | காலை 9.00 மணி | வாசுதேவநல்லூர் (தனி) | சங்கரன்கோவில், வாசுதேவநல்லூர் ஆகிய ஒன்றியங்கள் – சிவகிரி பேரூர் | வாசுதேவநல்லூர் |
| மார்ச் 14 | மாலை 4.00 மணி | முதுகுளத்தூர் | கடலாடி, கமுதி, முதுகுளத்தூர் ஒன்றியங்கள் | கடலாடி |
| மார்ச் 14 | மாலை 6.00 மணி | பரமக்குடி (தனி) | நயினார்கோவில் ஒன்றியம், பரமக்குடி தெற்கு நகரம் | நயினார்கோவில் |
| மார்ச் 14 | இரவு 8.00 மணி | திருவாடானை | ஆர்.எஸ்.மங்கலம், திருவாடானை ஒன்றியங்கள் | திருவாடானை |

இவ்வாறு தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன், தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ. ராஜா எம்.எல்.ஏ., இராமநாதபுரம் மாவட்டச் செயலாளர் காதர்பாட்சா (எ) முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. ஆகியோர் அறிவித்துள்ளனர்.

# நாகர்கோவில் மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - மேயர் ரெ.மகேஷ் பட்ஜெட்டை தாக்கல் செய்தார்!

கன்னியாகுமரி, மார்ச் 14 -

நாகர்கோவில் மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள் இயல்பு கூட்டம் மற்றும் 2026 - 2027ம் நிதி ஆண்டுக்கான உத்தேச பட்ஜெட் தாக்கல் மாமன்ற கூட்ட அரங்கில் வைத்து 13.03.2026, வெள்ளிக்கிழமை அன்று கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ. மகேஷ் தலைமையில் நடைபெற்றது.

ஆணையாளர் நிஷாந்த் கிருஷ்ணா, துணை மேயர் ம.மேரி பிரின்ஸி லதா ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் 2026-27ம் நிதியாண்டுக்கான உத்தேச பட்ஜெட் தயாரிக்கப்பட்டு ஆணையாளர் நிஷாந்த் கிருஷ்ணா, மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் அவர்களிடம் வழங்கினார். அதனை மேயர் ரெ.மகேஷ் மாமன்ற கூட்டத்தில் தாக்கல் செய்தார்.

பட்ஜெட்டில் வருவாய் மற்றும் மூலதன நிதியாக ரூ. 277 கோடியே 46 இலட்சம், குடிநீர் மற்றும் வடிகால் நிதியாக ரூ. 57 கோடியே 57 இலட்சம் என மொத்தம் ரூ. 335 கோடியே 3 இலட்சம் வருவாய் கிடைக்கும் எனவும், இதில் வருவாய் மற்றும் மூலதன நிதி செலவாக ரூ. 282 கோடியே 59 இலட்சம், குடிநீர் மற்றும் வடிகால் நிதி செலவாக ரூ. 62 கோடியே 63 இலட்சம் என மொத்தம் ரூ. 345 கோடியே 22 இலட்சம் செலவாகும். இதனால் ரூ. 10 கோடியே 19 இலட்சம் பற்றாக்குறை ஏற்படும் என்றும் நிதி நிலை அறிக்கையில் மாநகராட்சி மேயர் தெரிவித்தார்.

கூட்டத்தில் நாகர்கோவில் மாநகராட்சி பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சி திட்ட பணிகள், குடிநீர் திட்ட பணிகள், மழைநீர் வடிகால் ஓடைகளை சீரமைத்து அதன்மேல் நடைபாதை அமைக்கும் பணிகள் மற்றும் ஒவ்வொரு வார்டுகளிலும் மேற்கொள்ள வேண்டிய பணிகள் தொடர்பாகவும், மாமன்ற உறுப்பினர்களின் கோரிக்கைகள் குறித்தும் விவாதிக்கப்பட்டது.

கூட்டத்தில் மாநகர் நல அலுவலர் மருத்துவர் சரோஜா, நகரமைப்பு அலுவலர் கெபின் ஜாய், உதவி செயற் பொறியாளர் ரகுராமன், மண்டல தலைவர்கள் இ.ஜவகர், கு.அகஸ்டினா கோகிலவாணி, பா.செல்வகுமார், பா.முத்துராமன், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாநகராட்சி அதிகாரிகள் கலந்து கொண்டனர்.






நாகர்கோவில் மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள் இயல்பு கூட்டம் மற்றும் 2026 2027ம் நிதி ஆண்டுக்கான உத்தேச பட்ஜெட் தாக்கல் மாமன்ற கூட்ட அரங்கில் மாவட்டச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ் தலைமையில் நடைபெற்றது. ஆணையாளர் நிஷாந்த் கிருஷ்ணா, துணை மேயர் ம.மேரி பிரின்ஸி லதா ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் 2026–27ம் நிதியாண்டுக்கான உத்தேச பட்ஜெட் தயாரிக்கப்பட்டு ஆணையாளர் நிஷாந்த் கிருஷ்ணா, மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் அவர்களிடம் வழங்கினார். அதனை மேயர் அவர்கள் மாமன்ற கூட்டத்தில் தாக்கல் செய்தார். கூட்டத்தில் சரோஜா, கெபின் ஜாய், ரகுராமன், இ.ஜவகர், கு.அகஸ்டினா கோகிலவாணி, பா.செல்வகுமார், பா.முத்துராமன், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாநகராட்சி அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# தி.மு.க. கொள்கைப் பரப்பு இணைச் செயலாளர் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு!

தி.மு.க. மாணவர் அணிச் செயலாளராக பொறுப்பு வகித்து வரும் **வழக்கறிஞர் இரா.ராஜீவ்காந்தி** அவர்களை, அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, **கழக கொள்கைப் பரப்பு இணைச் செயலாளராக** நியமிக்கப்படுகிறார்.

"**அண்ணா அறிவாலயம்**"
சென்னை - 18
நாள்- 12.03.2026

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

# தி.மு.க. மாணவர் அணிச் செயலாளர் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு!

தி.மு.க. மாணவர் அணி துணைச் செயலாளராகப் பொறுப்பு வகித்து வரும் திருமதி. **ஜெ. வீரமணி** அவர்கள் **கழக மாணவர் அணிச் செயலாளராக** நியமிக்கப்படுகிறார்.

"**அண்ணா அறிவாலயம்**"
சென்னை - 18
நாள்- 12.03.2026

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.